1992 ஏப்ரல் 20]

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்விக்காக ஏராளமான பணத்தை ஒதுக்கி கொடுத்து கொண்டிருக்கிற நான் வணங்கி கொண்டிருக்கிற கடவுள் இதய தெய்வம் புரட்சித் தலைவியின் ஆட்சியில் 3 கட்டிடங்களைக் கட்டித் தருவதற்கு ஆவன செய்து நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருப்பதாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்களுக்கு என்னுடைய மன மார்ந்த நன்றியைத் தெரிவித்து, எங்களுடைய பகுதிக்கு இன்னும் இரண்டு கட்டிடங்களை அதிகம் கட்டுவதற்கு இந்த ஆண்டு போதிய நிதி வசதி இல்லை என்பதை தெரிந்து இருக்கிற காரணத்தால், அடுத்த ஆண்டாவது இன்னும் இரண்டு கட்டிடங்களைச் கட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா? ஏனென்றால் ஏறத்தாழ 2014 மாணவர்கள் பயிலுகின்ற இந்தப் பள்ளிக்கூடத்தில் ஏறத்தாழ 4 வகுப்புகள் வெளியிலேமரத்தடியிலே வைத்துகொண்டுஇருக்கிறார்கள். ஆகவே அருள்கூர்ந்து அந்தக் கட்டிடங்களைக் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போதுமான நிதி வசதி இருக்கும்போது, இந்தப் பள்ளிக்கு மேலும் கட்டிடம் கட்ட வேண்டுமென்ற யோசனை பரிசிலிக்கப்படும்.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பெரியார் மாவட்டத்திற்கு அருகிலுள்ள கோவை மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கல்வியிலே வல்லவர்; வல்லுனர். அவர்களுடைய நல்லாசி எங்களுக்கு எப்போதும் கிடைக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய நல்லாசியோடு அவர்கள் வருங்காலத்தில் செய்து தருவ தாகச் சொல்லி உள்ளார்கள். அதற்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக அவர்களுக்கு நன்றியை சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 554, திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

554—

பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்குக் கட்டிட வசதி

*5047—திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

[1992 ஏப்ரல் 20

(அ) தென்னாற்காடு மாவட்டம் சின்னசேலத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னசேலத்தில் இருக்கின்ற மகளிர் உயர்நிலைப் பள்ளி எங்களுடைய மாவட்டத்திலேயே முதன் முதலாக தொடங்கப்பட்ட பள்ளியாகும். அதிலிருந்து ஆண்கள் உயர் நிலைப் பள்ளி பிரிக்கப்பட்டு, இப்போது அது மேல்நிலைப் பள்ளியாக வளர்ந்து இருக்கிறது. ஆனால் இந்த மகளிர் உயர்நிலைப் பள்ளி, அந்தக் காலத்தில் கிட்டத்தட்ட 1936, 38-இல் கட்டப்பட்ட கட்டிடத்திலேயே இயங்கி வருகிறது. போதிய இட வசதி இல்லை என்பது மட்டுமல்ல, கட்டிடமும் பழுதாகி விட்டது. ஆகவே, அருள்கூர்ந்து நம்முடைய இதய தெய்வம் ஆட்சியில் அந்தப் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டவும் இருக்கின்ற கட்டிடத்தை மாற்றி யமைக்கவும் அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பள்ளிக் கட்டிடங் களுக்காக உலக வங்கியிடமிருந்து நிதியுதவி பெற அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது. ஆகவே, அந்தச் சந்தர்ப்பத்தில் இதுபோன்ற பள்ளிகளுடைய கட்டிடத் தேவைகளைப் பரிசீலனை செய்து அரசு கட்டிடம் கட்ட முடிவு எடுக்கும்.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியினுடைய ஆதாரத்தை வைத்துக் கொண்டு, நீண்ட ஒரு இடைவெளிக்குப் பிறகு கட்டுவதாக இருக்கின்ற ஒரு அறிவிப்பை அங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இருப்பதற்கே இடமில்லாமல் மரத்தினடியில் உட்கார்ந்து கொண்டு பெண்கள் படிக்கும் பொழுது, சாலையில் போய் வந்துகொண்டிருக்கிற சமூக விரோதிகள் அரட்டை அடிப்பதும், கிண்டல் செய்வதும் போன்ற நிகழ்ச்சிகள் நடந்து கொண்டு இருக்கின்றன. ஆகவே, அருள்கூர்ந்து அடுத்த ஆண்டாவது என்னுடைய சின்னசேலம் தொகுதியிலுள்ள, சின்னசேலம் நகரத்தில்

1992 ஏப்ரல் 20]

இருக்கின்ற அந்த பெண்கள் பள்ளிக்கு கட்டிடம் கட்டுவதற்கு வேண்டிய முயற்சியை அரசு எடுக்குமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதி வசதி இடம் தருமேயானால் அந்த முன்னுரிமைக்கேற்ப பள்ளிக் கட்டிடங்களைக் கட்டுவதற்கான ஒரு முயற்சியை இந்த ஆண்டே கூட அரசு மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 555, திரு. டி. சுதர்சனம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

555—

சென்னை நகரில் காலரா நோயினால் இறந்தவர்களின் எண்ணிக்கை.

* 1005—திரு. டி. சுதர்சனம்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1991 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முடிய சென்னை நகரில் காலராவினால் இறந்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) இந்த நோயைத் தடுப்பதற்காக அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ). சென்னை மாநகரில் 1991 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஜூன் முடிய காலராவினால் இறந்தவர்கள் எண்ணிக்கை 4. காலரா நோயால் பாதிக்கப்பட்ட இடங்களில் பழுதடைந்த குடிநீர் குழாய்கள் சரி செய்யப்பட்டன. அந்த இடத்திலிருந்து குடிநீர் மாதிரிகள் எடுத்து ஆய்வுக்குப்பின் ஆய்வின் முடிவினை சென்னை குடிநீர் வாரியத்திற்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது. சுமார் 1,23,964 நபர்களுக்கு இந்நோய்க்கு எதிரான நோய்த் தடுப்பு ஊசி போடப்பட்டுள்ளது. 4,533 குடிநீர் வழங்கும் நிலையங்களில் நோய்க் கிருமிகளை அழிக்க குளோரின் மருந்து கலக்கப்பட்டது. சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ளல், சூடான உணவுப் பொருட்கள் உட்கொள்ளல், நன்றாகச்சுடவைத்து பிறகு ஆற வைத்த நீரையே பருகுதல் போன்ற சுகாதாரக் கல்வி